உ

சிவமயம்

# முத்தான முருகன்

## தோத்திரப்பாடல்கள்



தொகுப்பாசிரியர்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முத்தான முருகன் தோத்திரப் பாடல்கள்



*திருச்சிற்றம்பலம்*

*துதி*

அத்தனே உமையாள் பங்கா ஆதியே நமசிவாயா
நித்தமும் ஜீவகோடி நினைந்து படி அளக்கும் தேவா
பக்தியால் பாமாலை சூடி பரமனே அறுமுகனின் மீது
முத்தான முருகன் பாடல் முன்னிற்க நீயே துணை

**தொகுப்பாசிரியர்:**

## புலவர் நாகமணி வினாயகமூர்த்தி

மூன்றாம் பதிப்பு - 20-08-2012
நான்காவது பதிப்பு-10-05-2018

விலை. 250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| என்னுரை | IV |
| அருளுரை | V |
| அணிந்துரை | VI |
| முருகையன் அகவல் | 01 |
| முருகர் தோத்திரம் | 03 |
| ஆசாரியப் பத்து | 06 |
| கழுகுமலைப் பத்து | 09 |
| சிறைமீட்ட பத்து | 12 |
| தரிசனைப் பத்து | 19 |
| பஞ்சாட்சரபத்து | 22 |
| திருச்செந்தூர்தோத்திரப் பத்து | 25 |
| கதிர்காமபத்து | 28 |
| கதிரேசப் பத்து | 30 |
| சுப்பிரமணியர் விருத்தம் | 35 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஓம் லம்போதராய நமஹ

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

உ

விழிக்குத் துணை திருமென்மலர்ப்பாதங்கள் மெய்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# என்னுரை

திருச்சிற்றம்பலம்

எந்தாயும் எனக்கருள் தந்தையும்நீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே

பெரியோர்களே!

இம்மண்ணுலகத்தவரும் தேவலோகத்தவரும் வணங்கிப் போற்றுகின்ற தேவ சேனாபதியாகிய எம்பெருமான், உறையும் திருச்செந்தூர், திருத்தணிகை, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை, பழனிமலை, சுவாமிமலை எனும் அறுபடை வீடு முதல் திருக் கதிர்காமத் திருத்தலத்தின் மீதும் திருமுருக அடியார்கள் பலர் ஐயனின் திருவருளால் வையகத்தில் என்றும் புகழோடு மனதை விட்டகலாத இனிமையான பாடல்களை எங்களுக்காக தந்து விட்டுச் சென்றுள்ளனர். இப்பாடல்களின் பத்துப் பதிகங்களைத் தேடித்தொகுத்து இத்தொகுப்புக்கு முத்தான முருகன் தோத்திரப் பாடல் எனத் திருநாமம் சூட்டியுள்ளேன்.

இப்பாடல்கள் முருகக் கடவுளை பல வடிவங்களில் நிலைநிறுத்தி அவ்வடிவத்திற்கொப்ப வரும் பாடல் பக்தி சுவையானதும் இனிமை பொருந்திய எளிமையான பாடலெனலாம் இப்பாடலுக்கு அருளுரை அருளிய எமது குருநாதர் தவத்திரு சுவாமிகள் திரு பாலாநந்தா அவர்களின் திருத்தாழ் போற்றியும் இத்தொகுப்புக்கு அணிகலனாக அணிந்துரை வழங்கிய உயர்திரு பரதன் கந்தசாமி (தமிழ்த் தென்றல்) நால்வர் கோட்ட ஸ்தாபகர் அவர்களையும் பல புத்தகப் பிரதிகளை எமக்குத் தந்துதவிய பெரியோர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

அடியார்களே!

இப்பாடல்களை கதிர்காம நடைபாதையிலும் ஆலயங்களிலும் வேல் அலகு செடிபோடுகின்ற போதினிலும் காவடிஆட்டங்களிலும் கசிந்துருகிப் பாடியும் நோய், இடர், துயரம் வரும் நேரங்களிலும் எமது இளைய சந்ததியும் இத்தோடிணைந்து கொண்டும் எமது பண்பாடு சீர்பெற்றோங்க ஸ்கந்தமுருகன் புகழோங்க பேர் பெற்ற பெருமானின் தலங்களோங்க என வேண்டி சிவசுப்பிரமணிய சுவாமி பதம் சரணடைகின்றேன்.


வணக்கம்

இவ்வண்ணம்,
ஸ்கந்த முருகன் திருவடி போற்றும்
புலவர் நா. விநாயகமூர்த்தி
(ஈஸ்பரிமூர்த்தி)

சேனைக்குடியிருப்பு.
15 - 06 - 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருளுரை

**குருநாதர் துணை**
**பொங்கி அருள்**

கலியுக வரதனாம் - கார்த்திகேயன்
காருண்ய மூர்த்தியாம் ஸ்கந்தன்
என்பது ஓங்க

இந்த கலியுகத்தில் மக்கள் ஒரு இயந்திர வாழ்க்கையில் அதர்மத்தில் மூழ்கி பொறாமை, அகங்காரம், பேராசை என்பதில் தன்னை அர்ப்பணித்து வாழும் இந்நாளில் ஆண்டவனை சிறிதும் சிந்திக்க நேரம் இல்லாமல் ஆடம்பரத்தில் அமிழ்ந்து இருக்கிறார்கள்.

நான், தான் என்றது அழிந்தால் அன்றி மனிதன் சீராக வாழ இயலாது. நான், தான் என்பது கலியுக மாயையில் மனிதனை தன்வசம் செய்து அவனை ஆண்டு வருகிறது.

பண்டைக்காலத்தில் நம் முன்னோர்கள் பயபக்தியுடன் ஆண்டவனை அன்புடன் நேசித்தார்கள். அதன் பயனால் சுக வாழ்க்கையை அனுபவித்தார்கள். ஆனால் இன்றோ விஞ்ஞானம், பொருளாதாரம் வளர்ந்து மனிதனின் சுயநினைவை (பக்தியை) அடிமையாக்கிக் கொண்டுவிட்டது.

இந்நிலைமாறி மக்கள் பயபக்தியுடனும், கடவுள் நம்பிக்கையுடனும் வாழ நாம ஜபம் ஒன்றே சிறந்தது. நம் புலவர் விநாயகமூர்த்தி அவர்கள் மக்கள் நல்வினை அடைய கந்தப் பெருமானின் பாக்களை அச்சிட்டு மக்களுக்கு அருளி இருப்பது மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மக்கள் இதை பாராயணம் செய்து சகல சௌபாக்கியம் பெற எல்லாம் வல்ல கதிர்காம வேலவனை வேண்டி வாழ்த்தியும், புலவர் அவர்கள் இத்தகைய பணியில் மென்மேலும் சிறக்க எம்பெருமானை இருகை கூப்பி வேண்டி ஆசீர்வதிக்கிறேன்.



திருப்புகழ் ஆஸ்ரமம்,
வள்ளிமலை, தென்னிந்தியா.

— **சாது பாலாநந்தா** சுவாமிகள்
(மேலாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அணிந்துரை

திருத்தணியில் உதித் தருளும் ஒருத்தன்மலை விருத்தன்
எனதுளத்தில் உறைகருத்தன் மயில் நடத்துகுகன் வேலே"

முருக வழிபாடு காலத்தால் முந்தியது. ஆறு முகசிவனாகப் போற்றபடுகின்ற முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் உதித்தவர். கார்த்திகைப் பெண்களால் கார்திகேயனாக வளர்க்கப்பட்டவர். அன்னை உமையவள் வழங்கிய சக்தி வேலை கையிலே தாங்கியவர். சூரபத்மனை வதம் செய்த வெற்றிவேலன். வள்ளி தெய்வானை மணவாளலோலன். குன்று தோறாடும் குமரன். ஆறுபடை வீடுகளிலிருந்து அருள் புரிபவன். கதிகாமத் திருப்பதியில் கதிர்வேலனாகக் காட்சியளிக்கின்றான்.

கலியுக வரதனான இந்தக் கந்தப் பெருமானை நமது சொந்தப் பெருமானாக நினைந்து காலத்திற்குக் காலம் காவடியாடி, தோத்திரம் பாடி கால்நடையாக யாத்திரை செய்யும் நிகழ்வு இன்று நேற்றல்ல பண்டு தொட்டு நடைபெறுகின்ற பாரம்பரியமாகக் காணப்படுகின்றது.

இந்த வகையிலே முருகன் அருள் பெற்ற முருகபக்தர்களால் உளமுருகி, உருவேறி பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பே இந்த முத்தான முருகன் தோத்திரப் பாடல்களாகும். இதில் பக்திச் சுவை கொட்டிக் கிடக்கின்றது. பழம் தமிழ் நறுமணம் நிறைந்து கிடக்கிறது. மனமுருகிப் பாடும்போது பரவசம் பொங்கித் ததும்பும், ஆனந்தமாய் ஆடும்போது அற்புதங்கள் நடக்கும்.

கதிர்காமப் பாத யாத்திரை செய்யும் பக்தர்கள் இத்தெய்வீகப் பாடல்களைப் பாடிச் சென்றால் பயம் வராது, பசி எடுக்காது, பாதம் நோகாது, நோய்பிணி அகலும் கந்தப் பெருமானை நமது சொந்தப் பெருமானாக்கிய உணர்வு தோன்றும். உள்ளம் லயப்படும். உண்மை ஒளி கிடைக்கும்.

இந்த அருள் பாடல்களை அலைந்து தேடி, திரட்டித் தொகுத்து, வெளியிடும் அருட்திரு. நாகமணி விநாயகமூர்த்தி அவர்கள் ஒரு ஸ்கந்த தாசர். இவர் பல தடவைகள் பாதயாத்திரை செய்து கதிர்காமம் சென்று கதிர்வேலனின் அருள்பெற்ற புலமையாளர். அவர் இது போன்று பல நூல்களை தேடித் தொகுத்து வெளியிட முருகப் பக்தர்கள் முன்னின்று உதவ வேண்டும் என அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்த் தென்றல், பரதன் கந்தசாமி
(பணிப்பாளர்)
நால்வர் கோட்டம்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகையன் அகவல்

திருச்சிற்றம்பலம்

ஓம் அரகர முருகா அரிதிரு முருகா
குருபரன் நீயே குவலயம் நீயே
மயின் மிசை வருவாய் மரகத வடிவேல்
சகல சீவ தயாபரப் பொருளே
அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகா
அமரரூப காரனே அசுரர்கொலை காரனே
அருணகிரி நாதர்க்கு மிக்கவர நல்குவாய்
ஆதிசிவ சோதியே அரகரசி வாயமே
அண்டபகி ரண்டங்க ளெங்கும்நி றைந்தவா
ஆரணம தானவா காரணம தானவா
கதிரமலை யுறைபவா கந்தகுரு வானவா
அத்திமுக வர்க்கிளைய சித்திரவடி வேலனே
அரகரசி வாயமே பரிபுரப வாயமே
ஈரேழு பதினாலு லோகத்தை யாள்பவா
ஏழையடி யாரையும் ஈடேற்றி யருளுவாய்
இப்புவியி லுன்கிருபை யப்பனே யல்லாது
எவ ருக்கு முதவா ரிதோ
இடையூறு தம்பனமும் சாடனம் மாறனம்
என்செய்யு மேவல்க ளெல் லாம்
எரித்துப் பொடித்துநீ றாக்கிவிடுங் கதிர்வேல்
இந்திர வேல் என்றுரைக் கில்
நினைவிலும் கனவிலும் நீரிலும் நூலிலும்
நிற்குமயில் வாகனா அட்சரம தானவா
நேசர்க்கு நேசனே நினைத்ததுகொ டுப்பவா
மாலுக்கு மருகனே மாதர்க்கு இனியனே
வேளைக்கு நல்குவாய் வேதவே தாந்தனே
மூவிரு முகத்தனே ஆறிரு புயத்தனே
பன்னிரு கரத்தனே பங்கய பதத்தனே
உக்கிர விதத்தனே உகந்தையி லுறைந்தவா
ஏழையுரு வாகுவாய் வரமெனக் கருள்செய்வாய்
நித்தமுனைத் துதித்துடும் பரிமளசு கந்தனே
பார்பதிதன் மைந்தனே பரமனார் புத்திரா
பக்தர்க்கு முத்திகளை உன்னிற்ற ளித்தவா
பரகதி கொடுப்பவா பழனிமலை யுறைபவா
செந்தூர மர்ந்தவா செங்கடக நகரியில்
திறைகொண்டு மீள்பவா திற்பரா நிற்பரா
அமரருப காரனே அடியவர் கரத்தனே
முடிவினை தொலைத்தவா வருவினையெ திர்த்தவா
அருவாகி யுருவாகி ஒளியாகி நின்றவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயனே கையனே மெய்யனே துய்யனே
ஆகனே கோகனே வாகனே மோகனே
அரியவன மீதிலே அனைத்துலகு மறியவே
காடுதனில் வள்ளியுடன் கூடிவழி சென்றவா
கருணைகள் கொடுத்தவா கதிரமலை வைத்தவா
மருவுதெய் வானையை மணமது முடித்தவா
மயில்வா கனத்தனே அயில்வேல் கரத்தனே
அடியே னுடற்பிணிக ளகலவருள் புரிகுவாய்
சத்துருசங் காரனே நித்தியவிசு வாசனே
நிரந்தரா துரந்தரா நிருதர்நெட் ரூரனே
தாரகா சூரனுடல் தானிரு கூறாகவே
வைத்தவமு தளித்தவா முத்திகள் கொடுப்பவா
சாலோக சாமீப சாரூப சாயுட்ச
சண்டப்பிர சண்டனே சாம்பிராணி வாசனே
அகிலகெம் பீரனே அகிலமுழு தாளுவாய்
செந்தூர்க் கதிபதி செங்கமல மேனியா
கற்பூர தீபம் எப்போது மேற்பவா
கானில்வரு வேடருடன் கூடியமர் செய்தவா
காசிக்கு நாயகா பூசிப்ப துன்னையே
கதிரைமலை யையனே தெரிசனையே னக்கருளுவாய்
வரமது நல்குவாய் வடிவேற் கரத்தனே
தாபரித் தாளுவாய் தயாபரப் பொருளே
தரிதகுண நீமிதமென நடனமிடு மயிலேறு
சரவண பவாயநம சயலொளி பவாயநம
திரிபுர பவாயநம திகழொளி பவாயநம
பரிபுர பவாயநம பவனொளி பவாயநம
திருநீறு தந்தவா தெரிசனைகள் தந்தவா
தேவர்க்கு மேலான சிந்தையறி வானவா
எங்கள்துயர் தீர்ப்பவா ஏழ்மையைத் தவிர்ப்பவா
உருத்ராட்ச வாசகா உபாயங் கொடுத்தவா
குருடர்க்கு விழி கொடுக்குமயில் வாகனா
குன்றுதோ றுளவே நின்றுவிளை யாடுவாய்
சொரூப வானந்த வடிவே லனே
அரிகரியும் நீயே அருவுருவும் நீயே
ஆழியின் மீது அமர்ந்தவன் நீயே
பலகலை யறிந்த பரம்பொருள் நீயே
நீயேயென் துயர்களை நீக்கியென் னாளும்
துன்பமணு காமல் துரிதமாய் வந்து
காப்ப துனக்குக் கடன்கண்டாயே
கந்தவே ளுந்தன் கழலிணை சரணஞ் சரணம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகர் தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

அரியெனவே இரணியன்தன் உயிரை உண்டோன்
அழகான இராவணனை அமரில் கொன்றோன்
பெரியவாய் அலகுதனை பிளந்து போட்டு
பேரரிய மாயமான் தன்னை எய்தோன்
உரியதொரு மாபெலியைச் சிறையில் வைத்தே
உலகமெலாம் ஓரடியளந்த மாயன்
அரிமருகா பவகுகசங்காரக் கதிரைவேலே சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 1

இரவியிரு பூமகளும் புந்திதானும்
இனிமையுள்ள பொன்கு கருமிராகுகேதும்
பறவையென்னும் பன்னிரெண்டு ராசிதானும்
பகைத்தென்னை நெருங்காமல் விலக்க வேணும்
புரவிகரி புலி கரடி புற்று நாகம்
பொல்லாத வொன்பது கோள் பகையாவண்ணம்
கரியமால்தன் மருகா கதிரவேலே சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 2

பாசமுடன் தண்டுபல கயிறு கொண்டு
பருத்தகிடா தனிலேறிப் பரிந்து காலன்
கூசாமல் எனைப் பிடித்துக் கட்டிக் கொண்டு
கூட்டைவிட்டு கொடுபோகப் போறபோது
ஆதாரமான மயில் மீதிலேறி
ஆறுமுகம் நின்றிலங்க அன்பாய் வந்து
காயம்பு மால்மருகா கதிரைவேலே சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 3

வேலுடனே வில்லம்பு வெடித்துவக்கு
வெட்டுவாள் பரிசை என்மேல் விலக்க வேணும்
சீலமுடன் வஞ்சனை பேய்பில்லிதானும்
தீமையெனக் கணுகாமல் காக்க வேணும்
ஆலமுடன் பாம்பு போலடகைதானும்
ஆனை பன்றி கரடி புலி யகல வேணும்
காலமுள்ள கதிரை மலைக் கதிரைவேலே சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவமுடன் அம்புலியும் கொன்றைதானும்
ஆறுடனே சடைமுடியும் நின்றிலங்க
உரமுடனே ஓடேந்தித் தடியுமூன்றி
உமையவளை இடப்பாகம் தன்னில் வைத்து
பரமெனவே யுலகமெங்கும் பிச்சையேற்கும்
பரமசிவன் உமைபாலா பட்சம் வைத்து
கரமதனிற் கற்பணமே மேந்தும் கதிரைவேலே சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 5

அன்னமெந்த வேளையிலும் கிடைக்கவேணும்
அடைக்காசு வெள்ளி பொன்தேடவேணும்
பண்ணுபல செந்தமிழ் நூல் பகரவேணும்
பரவரியகாரியம் வந்தணுக வேணும்
மன்னர் பல மந்திரிமார் உதவ வேணும்
வாருமிருமென்று சொல்லிப் பேசவேணும்
கன்னல் மொழி வள்ளி தெய்வானை பங்கா சுவாமி
கருத்து வைத்து என்னை நித்தம் காத்திடாயே. 6

கொஞ்சமுடன் வயது மெத்தக் குறைச்சலானேன்
கூறுமொழி கேளாத குழந்தையானேன்
நெஞ்சமெனும் மிருதயத்தை நிறுத்தலானேன்
நீர் சுழலும் பூச்சியைப் போல் உய்யலானேன்
பஞ்சவகனைப் போற்றி வித்துப் பதைக்கிறேன்நான்
பராமுகமாய் பார்ப்பதுவுன் அழகுதானோ.
வஞ்சனைகள் செய்யாதே கதிரைவேலே சுவாமி
வந்துனது கருத்து வைத்துக் காத்திடாயே. 7

அனலிலே உருகுகின்ற மெழுகதானேன்
ஆற்றருகிற் கடுத்தமரம் மலைபோலானேன்
கனவுகண்டு வருந்துகின்ற கதைபோலானேன்
கமலமுகம் காணாத களைபோலானேன்
இனம்பிரிந்த மானது போல் தயங்கலானேன்
இலவுதனைக் காத்திருந்த கிளி போலானேன்
மனமகிழ்ந்து சந்திப்பாய் கதிரை வேலே சுவாமி
வந்துனது கருத்துவைத்துக் காத்திடாயே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும்நீர் குறைந்தது போல் உப்புமானேன்
ஓடுகின்ற கப்பலின் பாய் மரமதானேன்
நாடுநகரில்லாத பெண் போலானேன்
நற்தாய்தனையே காணாத சவலையானேன்
சோடுதனைக் காணாத கிளிபோலானேன்
சுகயின்பம் தெரியாமற் துயரமானேன்
வாடுகின்றேன் மனம் கலங்கிக் கதிரைவேலே சுவாமி
வந்துனது கருத்து வைத்துக் காத்திடாயே. 9

மேகமது காணாத மயில் போலானேன்
வெய்யினில் மீதுருகின்ற வெண்ணெயானேன்
ஆகமது கருத்தாக உலர்ந்தேன் நானும்
அனுதினமும் உனை நினைந்துருகிறேனே
தாகமுடன்னெனது பங்கில் நின்று நின்றே
தாழ்மையுடன் சந்தோஷம் தந்துதவ வேணும்
நேசமுடன் மயிலேறும் கதிரைவேலே சுவாமி
நித்தமுடன் கருத்துவைத்துக் காத்திடாயே. 10

சிங்காரமில்லாத ஞானியானேன்
சேனை படையில்லாத வேந்தரானேன்
சந்தானம் துயரிழந்த தன்மையானேன்
தாமரையில் நீரது போற்றயங்கலானேன்
இங்காரும் துணைகாணேன் உன்னையல்லால்
என்னுடைய துயரகற்றி யென்னை யாள்வாய்
மங்காமல் உன்னடிமை கொண்டேனையா சுவாமி
வந்துனது கருத்து வைத்துக் காத்திடாயே. 11

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆசாரியப்பத்து

திருச்சிற்றம்பலம்

ஆறுமுகம் பன்னிரண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரணம் அணிந்த மார்பும்
திருமுகம் வெண்ணீறு புனைந்த மெய்யும்
செகமெல்லாம் புகழ்படைத்த சுப்பிர மணியா
முருகா சரவணபவனே கார்த்திகேயா
முக்கணனார் புத்திரனே உக்கிரவேலா
இருவருமே உனைப் பணிந்தோம் பழனிவேலா
இதுசமயம் வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 1

மயிலேறி விளையாடும் சுப்பிரமணியா
வடிவேலா உன்பாதம் நம்பினேனே
உயிரிழந்து அபகீர்த்தி யாகும்வேளை
உன்செயலால் இதுசமயம் உயிரைக் காப்பாய்
தயவாக இனிமேலும் உயிரைக் காத்து
சண்முகனே அடியார்கள் துயரைக்காத்தீர்
வைபோகமானமலைப் பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 2

வருந்துமடியாருயிரைக் காக்கும் தெய்வம்
வையகத்தில் வேறொருவர் இல்லையென்று
அறிந்து நான் உனைப் பணிந்தேன் சுப்பிரமணியா
ஆதரித்துப் பிராணபயம் தீருமையா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகிச்
சிறையிருந்து தனைப் பூண்டு சின்னமானேன்
பறந்து வரும் மயிலேறும் பழனிவேலா
பராபரனே உயிர்காத்து ரட்சிப்பாயே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவேங்கைப்புலி பிடித்த பசுவைப்போலே
பிதிர்கலங்கி மனந்தளர்ந்து புலம்பினோமே
இருவருமே உனைக்கூவச் செவிகேளாதோ
இது சமயம் தாமதமாய் இருக்கலாமோ
குருவாகித் தந்தை தாய் நீயே ஆகிக்
குமரேசா பிராண பயம் தீருமையா
முருகேசா இது சமயம் பழனிவேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 4

பாம்பின் வாய் சிக்கியதோர் தேரைபோலே
பதைபதைத்து வாடுகிறோம் பாலா நாங்கள்
தேம்பியே புலம்புகிறோம் துயரமாகித்
தென்னவனே உன் செவிக்குக் கேளாதோதான்
நானுஇப்புவியில் உன்னை நம்பியிருந்தேன்
நாயேனுக் கவதிவர ஞாயமோதான்
சாம்பசிவன் புத்திரனே பழனிவேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப்பாயே. 5

வலையிலகப்பட்ட உயிரதுபோல் மயங்குகிறோம்
வடிவேலா இதுசமயம் துயரம் தீர்ப்பாய்
கொலைகளவு பாவங்கள் செய்தகுற்றம்
கொடும் பிணியும் வஞ்சனை பில்லி சூனியமும்
தொலையாத சிறுபிணிநோய் வல்வினைகளெல்லாம்
துரத்துமையா மயிலேறும் சுப்ரமணியா
மலையிலுறை வாசகனே பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 6

நாகமது கருடனைக் கண்டஞ்சுதற்போல்
நான் பயந்து அலைதுரும்பாய் அலையலுற்றேன்
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே இதுசமயம் அடியேனுக்கு
மேகமது பயிர்க்குதவி செய்தாற்போலே
வேலவனே பிராண பயம் தீருமையா
வேகமுடன் வரவேணும் பழனிவேலா
வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப்பாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனை கையில் சிக்கியதோர் கிளியைப்போலே
புலம்புகிறோம் பிராணபயம் மிகவுமாகி
நானடிமை யுன்னை நம்பியிருக்கும்வேளை
நாயகனே பராமுகமாய்ப் பார்க்கலாமோ
மானீன்ற வள்ளி தெய்வானை பங்கா
வடிவேலா சரவணனே கருணை செய்வாய்
கான மயில் வாகனனே பழனிவேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப்பாயே. 8

தூண்டிலகப்பட்ட உயிரதுபோல் துடிக்கிறேன்
சுப்ரமணியா இதுசமயம் அடியேனுக்கு
வேண்டுவரம் கொடுப்பதற்கு பார்த்து நீயும்
வித்தகனே நின்கருணை தருவதெப்போ
மீண்டுவரும்வினை களைந்து துயரம் தீர்ப்பாய்
வேலவனே சூரசங்கார வேலா
ஆண்டவனே உனைப் பணிந்தோம் பழனிவேலா
அடியாரை உயிர்காத்து ரட்சிப்பாயே. 9

நஞ்சுபட்டு விஷமேறிமயங்குமாப்போல்
நடுநடுங்கிக் கிடுகிடென்று பயந்து நாங்கள்
தஞ்சமென்று உனைப்பணிந்தோம் சுவாமிநாதா
சற்குருவே பிராணபயம் தீருமையா
பஞ்சகனைச் சிறைவிடுத்து தலையை தூக்கி
பாதகத்தைப் பரிகரித்துப் பதமே தந்து
வஞ்சனைகள் செய்யாதே பழனிவேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப்பாயே 10

அத்திமுக்கண்ணனுக் கிளைய சக்தி வேலா
ஆறுமுகனே தணிகையிலே அமர்ந்த வாசா
இத்தினத்திற் பேசாத மூடனானும்
வேலவனே நின்னருளால் கவியைப் போலே
பத்துமே பதிகமாய் பாடிக் கொண்டேன்
என்மீதில் பிழைகள் தனைப் பொறுத்தேயாள்வாய்
சத்தியமாய் உனைப் பணிந்தேன் பழனிவேலா
சண்முகனே அடியாரை ரட்சிப்பாயே. 11

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகுமலைப்பத்து

கழுகுமலை தனில் உறையும் முருகவேளே
கருத்துடனே உன் பாதமலர் தானே ஓதப்
பழுதொன்றும் வாராமற் காக்கவேணும்
பச்சைமால் தன் மருகா பார்வதி யின்மைந்தா
வழுவாமல் அடியேன்முன் நிற்கவேணும்
வரும்பிழைகள் தனையகற்றி வழியே செய்வாய்!
தெளிவாக உன்பாதந்துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 1

காடுதனில் வேங்கை மரமாகிநின்றாய்
கானவர்கள் கண்டுன்னை கடுவேகத்தில்
சாடிடவே மனதிலெண்ணிப் பரிசைகத்தி
தானெடுத்தார் தவிடுபொடியாக்கவென்று
கூடிய குறவரெல்லாம் நிமித்தங்கண்டு
குமரவேள் என்றெண்ணிக் குலைந்திட்டார்கள்
தேடியே யுன்பாதந் துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 2

கிட்டாத பொருள்தன்னைப் போலெந்நாளும்
கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்
எட்டி எட்டியே உன்னைப் பார்க்கும்போது
ஏமாற்றி என்னைவிட்டு ஏகலாமோ?
சட்டமுடன் தோகைமயில் மீதிலேறிச்
சடாட்சரமாய் என்முன்னே தோற்றவேணும்.
திட்டமுடன் உன் பாதந்துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 3

கீர்த்தியுடனே இந்தப் புவியில் நானும்
கிருபையுடன் உன்பதியைத் தேடிவாறேன்,
பூத்தமலர் போலுன்னைக் காண்பதெப்போ?
புண்ணியனே எனக்கு வரந்தருவ தெப்போ?
வார்த்தையொன்று உரையாயோ வள்ளி வாழ்வே
வந்துனது சந்நிதியில் மனதன்பாகத்
தீர்த்தங்கள் ஆடியுனைத் துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவலயத்தில் அடியேன் நான் செய்தபாவம்
குற்றமெலாம் பொறுத்துனது குழந்தையைப் போல்
கவலையற்று வாழ்ந்திருக்கக் கருணை தந்து
காப்பது உன் செயலல்லோ கார்த்திகேயா
சவலை இளங்கன்றது தன் தாயைத்தேடித்
தயங்குவது போல நான் தயங்கலானேன்
சிவலை நிற மார்பழகா செந்தூர்க்கந்தா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 5

கூடியே மறலியென்னைப் பிடியாவண்ணம்
கொடுநரகிலே யானும் வீழ்ந்திடாமல்,
வாடியே மனம் மெலிந்து போகாவண்ணம்
ஆகவே உன்னுடைய கீர்த்திதந்து
பாடியே பவனொளி பவாயம் என்றால்
பறக்குமே பசாசிமுதல் ஏவல்தானும்
தேடியே உன்பாதந்துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 6

கெடுதியுள்ள சூரனையே வதையே செய்தாய்
கிளிமொழியாள் வள்ளி தினைப் புனத்திலேதான்
படிமீதில் தான் பெரிய பண்டாரம்போல்
பாசிபற்றியே பழுத்த கிழவனாகித்
தடியூன்றித் தண்டுகமண்டலமும் கொண்டு
சாட்டாங்கமாயக் குறவர்க் கெதிரே சென்றாய்
தேடியே உன் பாதந்துதிப்பேனையா.
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 7

கேசவனார் மருகோனே நீசெய்கோலம்
கெடிதான குமரகுர வேடனாகி
நேசமுடன் கையில் அம்பு வில்லுங்கொண்டு
நிமிஷமுடன் வள்ளிதினைப் புனத்திலேதான்
பாசமுடன் பெண்ணே கண்ணேயென்று
பண்புடைய வள்ளியை நீ பாகம் கொண்டாய்
தேசமெலாம் திரிந்தலைந்தேன் உன் பாதங்காண
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 8

கையிலே கோழிக் கொடியும் வேலும்
வள்ளி தெய்வானையுடன் மயில்மீதேறி
தைய நல்லாள் தூபதீபம் பிடிக்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யுடனே ஆறுமுகரூபமாகி
வேலவனே வந்தெனக்கு விடைகள்தாரும்
தெய் தெய் என்றுன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 9

கொன்றைமலர் வேணியனின் நெற்றிக்கண்ணில்
குழந்தையாய் வந்துதித்த குமரவேளே
அண்டரெல்லாம் உனைக் காண வேண்டியிங்கே
அபயமென்று கையேந்தி அணியில் நிற்பார்
தண்டை கிண்கிணி காலில் சதங்கை கொஞ்சத்
தானோடி வந்தெனக்குன் ஒளியைக் காட்டும்!
தெண்டனிட்டே உன் பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 10

கோதையர்கள் இருபுறமும் கவரிவீசக்
குளிரான மதிமுகங்கள் ஆறுந்துன்னக்
காதலுடன் பன்னிருகை வேலுந்துன்னக்
கான மயில் மீதேறுங் கார்த்திகேயா
வாதுடனே சோதையன் றென் சிகரந்தன்னை
வடிவேலால் நீறு செய்த வானோர்கோவே
சீத மருகோனே உன் புகழைச் சொன்னேன்
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 11

கவ்வியேபூத மென்னைப் பிடியாவண்ணம்
காத்துனது கிருபைதந்து இரட்சியும் ஐயா
வவ்வியே மெய்மறந்துமொரு பசாசுதானும்
பவனொளி பவாயம் என்றால் பறந்திடாதோ
ஒவ்வியே எனைச் சூழும் லாடன் மாடன்
ஓம் நமசிவாய மென்றால் ஓடிடாதோ
செவ்வையாய் உன்பாதந்துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 12

இக்கணமே இது நல்ல வேளையையா
இதோ பாரும் சந்நிதியில் திருவிழாவை
வணக்கமாய்க் கற்பூர மடவிளக்கு
வகை வகையாய்க் கன்னியர்கள் ஏந்தி நிற்க
எக்காளம், பேரிகையும் தம்பூர் மேளம்
இடி யெனவே எத்திசையும் முழுங்கி நிற்க
சிக்கணமே உன் பாதம் துதிப்பேனையா
சுவாமி தென்கதிரை முருகோனே தெரிசிப்பாயே! 13

- திருச்சிற்றம்பலம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைமீட்ட பத்து

திருச்சிற்றம்பலம்

காப்பு

பாதிமதி சூடிவரும் பங்கயனின் நற்புதல்வன்
தாழ்பணிந்து பாக்கள் இசை பாடுதற்கு- நாமமுற
நல்லாசிரிய விருத்தம் நான்கு பத்துமே முடிக்க
தன்னா தஞ்சலி செய்வோம் காப்பு

சண்முகனே ஐங்கரனுக்கு இளைய கோவே
தற்பரனே மெய்ப்பொருளே இப்போ வாவா
வன்மையுடன் வந்தெனக்கு வரங்கள் தாராய்
வானவர்கள் துயர் தீர்த்த வடிவேல் நாதா
என்கண்ணெதிரே வந்து நின்று கருணைதாராய்
காயாம்பு மேனியனே கதிரைவாழ்வே
திண்ணமுடன் உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே 1

சாரதியாய் வந்தெனக்கு முத்திசெய்வாய்
சற்குருவே மெய்ப்பொருளே தேவர் கோவே
காரானை மீதேறும் கந்தவேளே
கருத்துடனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
வாதாடி எனது சிறைமீட்கக் கந்தா
வருகுவாய் வள்ளி தெய்வானை யோடு
சீர்பாடி உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே 2

சிங்கமது கூட்டில் அடைபட்டுக் கொண்டு
தியங்கிறது போலேயான் தயங்கின்றேனே
கங்கை பெறுபுத்திரனே ஐயா வாவா
கருணை கொண்டு எந்தனுக்கு வரங்கள் தாராய்
மங்கையர்கள் இருவருடன் மயில் மீதேறி
வானவர்கள் கொண்டாடி மகிழ்ந்து போற்ற
சங்கை பெறவுன்பாதம் துதிப்பேனையா சுவாமி
சண்முகனே சிறை மீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீராடும் திருச்செந்தூர் உகந்த கோவே
தென்கதிரை தனிலுறையும் தேவர்நேசா
காரானை முகற்கிளைய கந்த வேளே
காலனவன் வரும்முன்னே கருணை தாராய்
மாறான வேடர் தங்கை தன்னை நீரும்
மரமாகி வதுவை செய்த மாய்கை போலே
வாதாடி உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
வந்தெனது சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே 4

சுந்தரியாள் பெற்றெடுத்த துரையே வாவா
சூரர்தனை வெற்றி கொண்ட துரந்தரனே வாவா
அந்தரத்தில் நடனமிடு மயில் மீதேறி
ஆறுமுகம் நின்றிலங்க அன்பாய் வாவா
மந்தரத்தில் அரசுபுரி அரனார் மைந்தா
வந்து யான் சிறைதனிலே பட்டுக்கொண்டேன்
வந்தனம் செய்துன்தனையான் துதிப்பேனையா சுவாமி
வந்தெனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே 5

சூதாடிப் பஞ்சவர்கள் அரசு தோற்று
தோகையரொடு வனவாசம் சென்றார்ப்போலே
வாதாடி அரசுடனே எதிர்த்துக் கொண்டு
வன்மையுடன் நான் சிறையில் பட்டுக் கொண்டேன்
மாதாவின் கண்காணாச் சரவணையில்
வளர்ந்துமே வானவர்கள் துயரம் தீர்த்தாய்
சீர்பாடி உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே 6

சென்றெதிர்த்த சூரர்களை வதையே செய்தாய்
தேவாதி தேவர்களைச் சிறையும் மீட்டாய்
மண்டலத்தில் உன்னை அல்லால் வேறு தெய்வம்
வானுலகத் தேவர்களும் கண்டதில்லை
குன்றெறித்தோன் நிரை காத்தோன் மருகா வாவா
குருபரனே வந்தெமக்கு வரங்கள் தாராய்
தெண்டனிட்டு உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே. 7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேடன் முதற் காளியொடு தில்லை தன்னில்
திருநடனம் செய்ததொரு அரனார் மைந்தா
வாடைதனில் அகப்பட்ட கப்பலாகி
வாடுகிறேன் மறியலெனும் வீடு தன்னில்
காடையது வேடன் கைதன்னில் பட்டு
கட்டுண்டு சிக்கியதோர் உயிர் போலானேன்
நாடிவந்து உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
நாயகனே சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே. 8

சைவநெறி உடையதொரு அரனார் மைந்தா
சற்குருவே மெய்ப்பொருளே தேவனேசா
வையகத்திலுனையல்லால் வேறு தெய்வம்
வானுலகத் தேவர்களும் கண்டதில்லை
கையறவே எனை அரசி பிடித்துக் கொண்டு
காவலுடன் மறியல்தனில் வைத்துக் கொண்டார்
தெய்வமே உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே. 9

சொற்பனத்தில் வந்தெனக்கு முத்தி செய்வாய்
தோகை மயில் வாகனனே பழனி வேலா
விற்பிடித்த வேடர் தங்கை தன்னை நீயும்
வேணு மென்று வதுவை செய்து வேங்கையானாய்
கற்பதித்த தூண் போலே கலங்கா வண்ணம்
காத்தெனது சிறைமீட்டாய் கதிரை வாழ்வே
அற்பனெனக் காதரவாய் ஒருவரில்லை சுவாமி
அன்பு வைத்து சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே.10

சோடிழந்த கலையானேன் அரவின் வாயில்
துன்பமுற்று நின்றதொரு உயிரதானேன்
கோடைதனில் வாடியதோர் பயிரதானேன்
குருபரனே வந்தெனக்கு வரங்கள் தாராய்
ஓடைதனில் வீழ்ந்ததொரு உயிர் போலானேன்
உன்னையன்றி காப்பாற்ற எனக் ஒருவரில்லை
நாடி வந்து உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே. 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌக்கியத்தை இழந்து நான் அரசனிட்டச்
சண்டாளச் சிறைதனிலே பட்டுக்கொண்டேன்
மயக்கமுற்று வாடுகின்றேன் வானோர் கோவே
வந்தெனது சிறை மீட்பாய் வள்ளி பங்கா
முதிரிணக்கமில்லாத வள்ளியம்மை தாயார்தானும்
முன்னின்று என்னுயிரைக் காக்கவேணும்
தயக்கமுடன் உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
தயவாக எனது சிறைமீட்டு உயிர் காத்து ரெட்சிப்பாயே.12

இக்கணமே இதோ பாரும் இரண்டு கையில்
இரும்பினால் மாஞ்சி இட்டுக்கொண்டு போறார்
பக்கமெலாம் எனக்கு ஒருவர் துணையும் காணேன்
பராபரனே நீயல்லால் வேறு தெய்வம்
முக்கணணார் புத்திரனே வடிவேலையா
முன்னின்று எனதுயிரைக் காக்கவேணும்
சிக்கனவே உன்பாதம் துதிப்பேனையா சுவாமி
எனது சிறைமீட்டு உயிர் காத்து ரட்சிப்பாயே. 13

பத்துடனே திருவிருத்தம் பாடிக் கொண்ட
பாலனுக்கு வரமளிப்பாய் பழனி வேலே
குற்றமற்று இவ்விருத்தம் தன்னில் உள்ள
குறைகளைப் பொறுத்துனது குழந்தை தன்னை
கற்பமுடன் எனது மனம் கலங்கா வண்ணம்
காத்துனது கிருபை செய்வாய் கதிரை நாதா
விற்பமொன்றும் வாராது செந்தூார் வேலே சுவாமி
விரைந்து எனது சிறைமீட்டு உயிர்காத்து ரெட்சிப்பாயே.14

வருந்துகிறேன் ஏழைதனக் கிரங்குமையா
வடிவேலா ஆறுமுகனே வாவா சுவாமி
இருந்தடியேன் சிறையில் மனக்கவலை கொண்டு
என் துயரமெல்லாம் தீருமையா சிவபெருமான் மகனே
வந்து கருத்தறியா மூடனுக்கு இந்த வேளை
குற்றமொன்றும் வாராமல் காக்க வேணும்
விக்கினேஸ்பரா உன்பாதம் பணிந்தேனையா சுவாமி
விஸ்ணு குறைதீர்த்தருள வருகுவாயே. 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருமையா அறுமுகனே வாவா சுவாமி
வருந்துகிறேன் நெடுநாளாய் மறியல் வீட்டில்
பாருமிதோ அன்பு வைத்து எந்தன் மீது
பார்த்தெனது சிறை மீட்பாய் பழனிவேலா
ஆருமில்லாப் பரதேசி ஆனேன் இப்போ
அருமையுடன் பெற்றெடுத்த தாயாரில்லை
ஆதரித்து ஆளுமையா அடியேன் தன்னைச் சுவாமி
அரும் சிறையை மீட்டருள வருகுவாயே. 16

விரும்பியே உன் பாதம் தேடிவாறேன்
வேறொருவர் துணை எனக்குக்காணேனையா
கரும்பு தன்னை எறும்பு வந்து கடித்தாற் போல
கடிக்குதையா மூட்டை என்தன்தேகமெல்லாம்
பொறுத்தருளக் கூடாமல் விடியு மட்டும்
புலம்பியே எனது நெஞ்சம் வாடுதிப்போ
புள்ளிமயில் ஏறிவந்து வள்ளி கூடச் சுவாமி
புகழ்தடியேன் சிறை மீட்க வருகுவாயே 17

வீரமுள்ள கொஸ்த்தாப்பு விதானை மாரும்
வெகுசனங்கள் கூடி என்னைக் கட்டிக் கொண்டு
ஓரமுள்ள அநீதி சொல்லிக் கள்வனென்று
உபாயமதாய் மாஞ்சியிட்டுக் கொண்டு போறார்
பக்கமெல்லாம் எனக்கொருவர் துணையும் காணேன்
பராபரனே உன்னையல்லால் வேறுதெய்வம்
பாரமுள்ள கை மாஞ்சி நோகுதையா சுவாமி
பட்சம் வைத்து எனது சிறை மீட்க வருகுவாயே 18

உனது மனம் உருகி அருள் புரிவாய் என்று
உன்புகழைப் பாடுகிறேன் உமையாள் மைந்தா
எனது மனம் பயந்து நொந்து வாடுதிப்போ
இதுவேளை பறந்து வந்து சிறை மீட்பாய் பழனிவேலே
மனது கொண்டு வள்ளி தனைச் சேர்வதற்கு
வனமதிலே வேடுவனாய் சென்றார்ப்போலே
கனதுயரமாகி யுன்னைத் தெண்டனிட்டேன் சுவாமி
கடவுளே எனது சிறை மீட்க வருகுவாயே 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரை விட்டுப் பிறதேசம் கொண்டு போறார்
ஒருவருமே எனக்குதவி செய்வாரில்லை
வாரமிட்டு வழக்குதனைப் பேசி வெல்லவென்று
வருகிறார் வெகுசனங்கள் எதிரிபக்கம்
ஆரமிட்ட மணிமார்பு தானேதுன்ன
அன்புடனே அப்புக்காத்திப்போ வைத்து
சோரவிடா வண்ணமதாய்ப் பேசுமையா சுவாமி
துயர் தீர்த்து என் சிறைமீட்க வருகுவாயே 20

வெள்ளியினால் வேல் அலகு நாகபாசம்
விலங்கிட்டு கைதனிலே வேலுமேந்தி
வள்ளியம்மை தெய்வானைத் தாயார் பாதம்
வந்து நான் ஓர் மனதாய்த் தொண்டு செய்வேன்
தெள்ளிய தோர் வேலவர்க்குச் சொல்லுமம்மா
சிறைதனையே விலக்கிவிடவேணுமென்று
முள்ளெனது முதுகிட்டு வருவேனையா சுவாமி
முன்வந்து எனது சிறை மீட்க வருகுவாயே 21

வேற்றுவமாகியே யான் சிறையில் பட்டு
மிகமெலிந்து வாடுகின்றேன் விதிவண்ணத்தால்
மாற்றிடுவாய் இச்சிறையை வானோர் கோவே
மாற்றில்லாத் தங்கநிறமேனியனே வடிவேலா
காற்றுனக்கு வெண்சாமரை வீசுதையா
கதிர்வேலா அடியேனைக் காக்க வாவா
நாற்றிசையும் உன் புகழைப்பாடி நிற்பேன் சுவாமி
நாயகனே எனது சிறைமீட்க வருகுவாயே. 22

வையகத்தில் பொய் வழக்கு எடுத்தபேரை
வடிவேலா உலகில் உள்ளோர்கண்ணால் காண
மெய்யாக இவ்வுலகோர் காண்பதற்கு
ஏதும் ஒரு கேடுவரக் காட்ட வேணும்
பொய்யான காயமதைச் சுமந்துநானும்
இப்போர் சிறையில் இருக்க விதியோ பிரமா
ஐயாவே உனை நினைத்து அடிதொழுதேன் சுவாமி
என் அரும் சிறையை மீட்டெடுக்கவருகுவாயே 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றும் அறியேன் எனது ஏழை நெஞ்சம்
உருகுதையா தீயிட்டமெழுகு போலே
கொண்டென்னைக் கொலை செய்ய வேணுமென்று
கூட்டமதாய் கூடி யவர் பேசும்போது
கண்டுனது மனமிரங்கிக் கருணை கூர்ந்து
கருத்துடனே வந்தெனது கனவில் சொல்லும்
அன்று முதல் இன்றளவும் உமக்கடிமையானேன் சுவாமி
அருள் புரிந்து எனது சிறை மீட்க வருகுவாயே 24

ஓது மொழி தன்னைக் கேளும் உமையாளீன்ற
உண்மையுள்ள தற்பரனே என்னை ஆள்வாய்
தீதுசெய் துசண்டாளர் சிறையில் இட்டார்
சிவசிவா இதனைப் போல் கொடுமை உண்டோ
சூது செய்த வஞ்சகனின் நெஞ்சம் தன்னைச்
சூலத்தால் குத்திடுவாய் வருத்தம் கொள்ள
மாதுஉமைக்கும் ஈஸ்பரர்க்கும் தொண்டனிட்டேன் சுவாமி
மனதிரங்கி எனது சிறைமீட்க வருகுவாயே 25

வெளவிலே மரமதனைச் சேர்ந்தாற்போலே
வந்தென்முன் பொய் சொன்ன சாட்சி பேரைக்
கவ்வியே நாகமது கடிக்க வேணும்
கதிர்காமம் தனை நினைத்தால் வினைகள் தீரும்
அவ்வியே அரவமது தீண்டுதற்கு சுவாமி
அருள்புரிவாய் சத்துரு சங்காரவேலே
பவ்வியே பழனிமலை மீதிருந்து சுவாமி
பட்சமுடன் எனது சிறைமீட்க வருகுவாயே 26

இவ்விருத்தம் பாடினேன் உனை நினைத்து
ஏதுபிழை இருந்தாலும் பொறுத்தே யாள்வாய்
நல்விருத்தம் என்று சொல்லிப் பாடுதற்கு
நலமுடனே சரஸ்பதியும் என் நாவில் நிற்க
சொல் விருத்தம் தனிலுள்ள பிழைகளெல்லாம்
தும்பிமுகன் சொல் குற்றம் பொறுத்தேயாள்வார்
எவ்வுயிர்க்கும் தாயான ஈஸ்வரனார் சுவாமி
இக்கணமே எனது சிறை மீட்க வருகுவாயே 27

- திருச்சிற்றம்பலம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருசனைப்பத்து

திருச்சிற்றம்பலம்

தற்பரனே மெய்ப்பொருளே சத்தி வேலா
சங்கரனார் தன்மகனே வாவா என்முன்
வெற்றிவேல் தரித்த முருகையா வென்று
விண்ணோர்கள் தான்துதிக்கும் வேந்தர்கோவே
அற்புதமாய் உந்தனிடம் வந்தபேர்க்கு
அருள் கொடுத்துப் பிணிதீர்க்கும் முருகநாதா
கற்றறியா என்தன்னை காக்க வாவா நீ
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 1

தாண்டியே உனைநம்பி வந்தபேர்க்குத்
தவறாமல் வரங்கள் அள்ளிக் கொடுக்கும் வேலோன்
வேண்டியே யுன்பாதம் விரும்பினோர்க்கு
வினைதீர்த்து அருள்செய்யும் விண்ணோர் கோவே
ஆண்டியைப்போல் தினைப்புனத்தில் வள்ளிதன்னை
அணையவென்று மனதிலெண்ணிச் சென்ற வேலா
காண்டீபன் தனக்கு வரங் கொடுத்தோன் மைந்தா
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 2

திருத்தணிகை வாசா உன்பதத்தை யானும்
தினமும் என் மனதில் எண்ணிக் கலங்குகின்றேன்
கருத்துவைத்து என்னை நித்தங் காக்கவேணும்
கரியமால் தன்மருகா கதிரைவேலே
பொருத்தமத வாரணந்தான் கராவுக்கஞ்சி
பொருதுநின்று ஓலமிட்டவாறு போலே
வருத்தமுற்ற என்னைத்தான் காக்க வேணும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 3

தீராத மனக்கவலை தீர்ப்பாயென்று
சித்தத்தில் உனை நினைத்து கலங்குகிறேன் நான்
வாரணத்தைக் காத்து வரங்கொடுத்தவேலா
மாயவனார் தன்மருகா வள்ளிவாழ்வே,
பார்போற்றும் வடிவுமையாள் மைந்தா உன்றன்
கடைக்கண்ணாற் பார்த்தால் என்கவலை தீரும்.
சீரான அசுரர்குலம் தன்னை வென்ற
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங்கமுறு கோபுரத்துக் குள்ளிருந்து
துரிதமுடன் உனையேற்றி வாறபோது
அங்கமெல்லாம் வெடுவெடுத்து ஆடிநின்று
அபயமென்று கையேந்தி நிற்கின்றேன்பார்!
பங்கயம்சேர் மடவார்கள் இருவரோடு
பச்சைமயில் ஏறிவந்துன் பாதங்காட்டி
கங்கையணிந்தோன் மகனே கருணைசெய்வாய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 5

தூண்தனிலே அரியிருப்பார் என்றுசொல்லித்
துயரமுற்ற பிரகலாதன் தன்னைக்காக்க
வேண்டியே நரசிங்க ரூபங்கொண்டு
வினைசெய்த இரணியனைக் கொன்று வெற்றி
நீண்டநாள் துயரமுற்ற இமையோர்தம்மை
நிலம்காத்து அருள்கொடுத்தார் உனது மாமன்
தீண்டுதுயர்தனைப் போக்கப் பணிகின்றேன் நான்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 6

தெண்டனிட்டேன் உன்பதத்தை மனதிலெண்ணித்
தீராத கவலையுடன் திரிகிறேன் யான்
மண்டலத்தில் என்துயரம் தீர்க்க இன்னும்
மனமுனக்கு இரங்கலையோ வானோர்கோவே?
தெண்டனிட்டேன் வள்ளியம்மை தெய்வானைத்தாய்
தெரிசனைகள் ஒரு போதுங் காணேனையா,
கண்டு உன்னைத் தரிசிக்கக் கருணைதாரும்
சுவாமிகனக வள்ளிநாயகனே பழநி வேலே. 7

தேடரிய பூவுலகில் உன்னையல்லால்
சித்தம் வைத்தருள் செய்வார் ஒருவரில்லை
காடதனில் வேங்கைமரமாகி நின்றாய்
கானவர்கள் கண்டெடுத்த கன்னிக்காக,
வேடர்தங்கைதனைநாடி வனத்திற்சென்ற
வித்தகனே எனக்கு நின் கருணைதாரும்
நாடியுனை நான்பணிய வரத்தைத்தாராய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையலர்கள் தீவட்டி பிடித்து நிற்கத்
தாதியர்கள் இருபுறமும் கவரிவீச
மெய்யுடைய ஆறுமுகவேலா என்று
வேண்டியே அடியார் கையேந்தி நிற்க
கையிழந்தவன் நிலையிற் கலங்கிறேன்யான்
காருமையா கருணைவைத்துக் கார்த்திகேயா
ஐயாஉன் மனந்திறந்து காட்சிதாரும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநிவேலே 9

தொண்டரெல்லாம் வந்து நித்தம் பணிந்து போற்றத்
தோகையர்கள் இருவருடன் அமர்ந்தமூர்த்தி
வண்டமிழ்சேர் பொய்கை தன்னில் உதயமான
வடிவேலா வந்து மனத்துயரந்தீர்ப்பாய்,
பண்டுமறை சிறந்திலங்க உனதுபாதம்
பரிவுடன் பணிந்தேன் நான் பல நாளாகத்
தொண்டுகண்டு செய்யவரந்தருவாய் நாளும்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 10

தோகைமயில் மீதேறும் கார்த்திகேயா
தொழுது தொன்றும் உன்பாதம் பணிந்தபேர்க்கு
மேகமது பயிர்க்குதவி செய்தாற்போல
வினையகற்றி யருள் புரிவாய் விண்ணோர்கோவே!
தேகமெனும் பொய்யுடலைச் சதமென்றெண்ணிச்
சிந்தைமிக நொந்துமனம் வாடுறேன்யான்
நாகவிடங் கொண்டகண்டர் மைந்தாகாப்பாய்!
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 11

தௌவெனவே உதயகிரி நடுங்கமுந்நாள்
தாண்டவம் ஆடிநின்றோன் மகனேவாவா
சவ்வென்றும் கிலியென்றும் சிவாயமென்றும்
சகலவிதிமுறைபணிய அறியேன் நானே
கவ்வியே எனைச்சூழும் பிணியும் நோயும்
கடுவிஷமும் பிசாசுகளும் கண்டேஅஞ்சி
உய்வின்றிப் பறந்தோடக் கிருபை செய்வாய்
சுவாமி கனகவள்ளி நாயகனே பழநி வேலே. 12

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பஞ்சாட்சரப்பத்து

திருச்சிற்றம்பலம்

பஞ்சாட்சரப் பொருளே அரனார் ஈன்ற
பங்கயமே நங்கை உமைதன் மைந்தா
தஞ்சமெனும் அடியாரைக் காக்கவேணும்
சண்முகனே அகமகிழ்ந்து அபயம் தாராய்
கஞ்சமெனு மதிமுகத்தைக் காண எந்தன்
கண்ணிரண்டும் மாசடைந்து கவலை கொண்டேன்
வஞ்சமென மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள்செய்தருகுவாயே 1

பார்பதியாள் பெற்றெடுத்த துரையே இந்தப்
பார்தனிலே யான் பாவியானேனையா
வார்குழலாள் வள்ளியுடன் மயில் மீதேறி
வந்தெனது துயரமதைத் தீருமையா
கார்சிறந்த செவ்வேளே உன்னை நம்பிக்
கனத்த செடி அலகிடுவோர் அனேகம் மண்மேல்
சீர் சிறந்த மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே 2

பித்தரைப்போல் அறிவழிந்து பிதற்றுதற்கு
பேசாமல் இருப்பதற்கு ஞாயமோதான்
பத்தரை மாதுற்றதொரு செம்பொன் மேனி
பாவியென்தன் கண்ணெதிரே வரலாகாதோ
சித்தரைப்போலிப்புவியில் பலகால் நானும்
செய்ததொரு தீவினையால் தியங்கிவாடி
வித்தகனே மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே 3

பீலிமிசையேறிவரும் பரனே நான் செய்த
பிழை பொறுத்து உந்தனிட பிள்ளையைப்போல்
சூலியருள் புத்திரனே எந்தன் முன்னே
தோகை மயில் ஏறி மிகு துரிதமாக
காலிகளை மேய்ப்பதுபோல் கருணை தந்து
காசினியில் எனது துயர் தீருமையா
வலித்து மிக மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென் கதிரை தனிலுறையும் தேவனே யான்
செய்ததொரு தீவினையால் தியங்கிவாடி
வண்டணியும் மார்பணியும் மதன வீணை
மங்கையர்களிருபுறமும் வாள் ஏந்திநிற்க
அண்டரெல்லாம் மகிழ்ந்து மலர் மிகவேதூவ
அப்பனே மனதிரங்கி யாளுமையா
மண்ணுண்ட மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 5

பூவனத்திலே யிருக்கும் வள்ளிக்காக
பொய்யுருவமாகி வன வேங்கையானாய்
கோவளித்த சூரனுக்காய் முருகனானாய்
கூறுகின்ற நதிதனிலே மகரமானாய்
ஆதரவு அற்றேனேஇந்தவேளை
அரிமருகா எனது துயர் தீர்க்க வாரும்
பார்வைபட்டுமேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 6

பேரான சரவணப் பொய்கைமீது
பிறையெனவே வந்துதித்தாய் தரணிவாழ்க
அரியசிவன் தனக்கு உபதேசமிட்டாய்
அமர் பொருதுங் கயமுகனை அணங்கு செய்தாய்
கரிமருகா மனதிரங்கி எந்தன் மீது
கலிகூர்ந்து அடியேனைக் காருமையா
திரிகமல மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 7

கேசரிவேல் என்னையருள் ஐயா வாவா
கிளிமொழியாள் வள்ளி மணவாளா வாவா
காசுபுரி மார்பழகா கதிர்வேல் வாவா
கங்கையனே என்னாவில் இருக்க வாவா
வாசி எனும் தோகைமயில் மீதிலேறி
வளமுடனே துணையாக இங்கே வாவா
ஆசுதகு மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 8

பைநாகம் சடையிலணி பரனின் மைந்தா
பாவியெனும் அசுரனுக்குப் பயந்தவேலே
வைபோகமான வடிவேலையேந்தும்
மால்மருகா எனது துயரம் தீர்ப்பா யிப்போ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயையோ யிவ்வேளை நான் படும் துயரம் தன்னை
ஆதரித்து யாள மனதிரக்கங்கொள்வாய்
பொய்யான மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 9

பொருளற்றேன் ஆயிழையாள் ஆசையற்றேன்
பொன்னான சொந்தங்கள் ஆருமற்றேன்
பாரற்றேன் படு பாவியானேன் இந்தப்
பார்தனிலே நான் தனித்துக் கொண்டேனையா
மருளற்று என்னெஞ்சம் வாடி நொந்து
மலர்மேனி மெலிந்தேனே மயங்கி வீழ்ந்தே
திருவுற்ற மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 10

போர்பொருதும் சூரர்களை வதையே செய்தாய்
புனந்தனிலே குறமகட்காய் வதுவை செய்தாய்
ஆர்பொருது ஐங்கரனார் அண்ணர் தன்னை
அருள் பெருக வரவழைத்தாய் அண்டர்க்காக
பார்புகழும் என்கோவே உந்தனாசை
பற்றுதையா என் நெஞ்சம் பதியிலாகி
ஏரேழு மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 11

பௌவமதிற்றுயிலிசை முருகா பழனிவேலா
பாதகனான் செய்ததொரு பழிதானேதோ
தெளிவையவரீண்டெடுத்ததவமு மீதோ
தீண்டாத சாதிமுறை சதிகள் தானோ
கோவைதனில் எண்ணெய் குடைந்தொழுகியதுபோல்
கொடுமையதால் எந்தனுடல் கலங்கி மெத்த
செவ்வைதிரு மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 12

இப்பொழுதே வாருமையா இந்த வேளை
எந்தன் ஆவி தடுமாறிப் போகுமுன்னே
செப்பு மணிமார்பழகுமிடையுமின்னத்
தேசிகனே வள்ளி தெய்வானையோடு
மன்றாடி உன்பதியில் நின்றபேர்க்கு
மாறாத நோயகல அருளே செய்வாய்
துப்புகண்டு மேனியெல்லாம் நோகுதையா சுவாமி
திருமுருகா வரமருள் செய்தருகுவாயே. 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருச் செந்தூர் தோத்திரப்பத்து

திருச்சிற்றம்பலம்

கதிரமலைதனிலுகந்த காலகாலன்
கங்கை திங்கள் சடைக்கணிந்த கமலமார்பன்
அயிலுகந்தோன் இலங்கை தன்னை மலங்க நின்ற
அசுரபுரமெரித்ததொரு அரனார் மைந்தா
எயிலுகந்தோன் மலை சிலையைத் தூணைத் தாங்கி
இடையுடைய திரைகடலில் அரவமீதில்
துயிலுகந்தோன் அரிமருகா செந்தூர்க்கந்தா சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே 1

காலெடுத்து மலையுடுத்திக் குடையாயிட்டுக்
கன்றெடுத்துக் காயெறிந்து காலிமேய்த்து
பாலுகந்து வெண்ணெய் தயிர் வாரியுண்டு
பஞ்சவர்க்குத்தூது சென்ற பச்சைமேனி
மாதுகந்தோன் மருகோனே வள்ளி வாழ்வே
வடிவுடைய செவ்வேளே மாயவேங்கை
தோலுகந்தோன் அறுமுகனே செந்தூர்க்கந்தா சுவாமி
தோகை மயில் ஏறி வந்து தோற்றுவாயே 2

கிங்கிணியர் கணநாதர் பணிந்து போற்ற
கேடில்லா மாமறையோர் வேதமோத
மங்கையர்களிருபுறமும் கவரி வீச
மகிழ்ந்திருந்த அறுமுகனே வானோர் கோவே
செங்க நெடுமால் மருகா அரனார் மைந்தா
சீறிவரும் சூரர்களைத் துணிக்கவென்று
துங்க வடிவேலெடுத்த செந்தூர்க் கந்தா சுவாமி
தோகை மயில் ஏறி வந்து தோற்றுவாயே 3

கீதங்கள் கிம்புருடர் நாதர் பாடக்
கிஞ்சுகவாய் அமிர்தமொழி மாதர் சூழ்ந்து
பாதங்கள் பரிவுடனே பணிந்து போற்ற
பண்பாக இனிதிருந்த அரனார் மைந்தா
மாதர்கள் ஓலமிட்டு வணக்கம் சொல்ல
மாயவனார் மருகோனே வள்ளி வாழ்வே
சூதங்க மேனியனே செந்தூர்க்கந்தா சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டானில் மண்சுமந்து அடியும் பட்டு
கூசாமல் நாடேறிப் பிச்சை வாங்கி
இட்டமுடன் சுடலைதனில் நடனமாடி
எவ்வுலகும் திரிந்து வந்த அரனார் மைந்தா
வட்டமுலை மாதுமையாள் குழலின் மீது
வற்றாத வாரிதனில் மகரமானாய்
துட்டர்குல மறுப்பவனே செந்தூர்க்கந்தா - சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 5

கூறாக அசுரர் தலை கொய்தாய் போற்றி
குறுமுனிக்குத் தமிழ் உரைத்தாய் குறவா போற்றி
தேடாரும் தினைப் புனத்தில் வள்ளிக்காகத்
திடமுடனே மரமாகித் தவசியானாய் போற்றி
கோடாரும் வினாயகனைப் பணிந்துபோற்றிக்
கோவிந்தா என்ற மொழி கூறக்கேட்டு
தோள்மாலை மணிமார்பா செந்தூர்க் கந்தா - சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 6

கெண்டயங்கள் விளிமடவார் மயங்கி வீழ்ந்து
கிலேசமுற்று நானடியேன் மெலிந்தேன் நாளும்
குண்டு பட்ட பறவைபோல் மண்மேல் வீழ்ந்து
உளமெலிந்து வாடுகிறேன் உம்பர் கோவே
அண்டருக்கும் முனிவருக்கும் அமிர்தமீந்து
ஆழிதனில் நஞ்சையுண்ட அரனார் மைந்தா
தொண்டருக்கும் அன்பான செந்தூர்க்கந்தா சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 7

கேசவனும் நான்முகனும் வேதநான்கும்
கிருபையினால் மலரெடுத்துப் பூசைபண்ண
வாசவனும் மற்றுமுள்ள அடியார் தாமும்
வருந்தாமல் வாரிதனில் நஞ்சையுண்ட
ஈசனார் திருமகனைத் தேடிக்காணா
ஏழையடியார்கள் செய்த கரும தோஷம்
தோஷமெல்லாமறுப்பவனே செந்தூர்க் கந்தா சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலே கமண்டலமும் சூலமேந்தி
கடகரியின் தோலதனை உரித்துப் போர்த்தி
மெய்யிலே வெண்ணீறு மிகவே பூசி
மிகமெலிந்து வாடுவதேன் விண்ணோர் கோவே
பையரவும் சிறுபொறையும் பன்றிக் கொம்பும்
படர்சடையின் மீதணிந்த பச்சைமேனி
துய்ய சிவனார் மகனே செந்தூர்க் கந்தா சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 9

கொந்திருக்கும் குவிமுலையாள் குமுதவாயாள்
கூரிய செவ்வேல்விழியாள் கூறக்கேளாய்
வெந்திருக்கும் விபூதியைப் போல மேனி தானும்
மிகமெலிந்து வாடுவதேன் விண்ணோர்கோவே
இந்திரர்க்கும் தேவருக்கும் தொண்டரான
யிலாசமுனி அகத்தியரும் இசைகள் பாடச்
சுந்தரர்க்கும் அன்பான செந்தூர்க் கந்தா - சுாவமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 10

கோட்டு மதவாரணத்தின் கராவுக் கஞ்சி
கோவிந்தா என்ற மொழி கூறக்கேட்டு
கேட்டவுடன் திகிரியினால் கராவைக் கொன்ற
கேசவனார் திருமருகா சிவனார் மைந்தா
காட்டிலுள்ள பன்றிதனைச் சுட்டுக் கொன்று
கண்ணப்பன்வாயதனால் சுவைகள் பார்த்து
சூட்டிறைச்சி தனையுகந்த செந்தூர்க் கந்தா - சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 11

கௌவலியால் உயிரிழந்து புல்லதானேன்
கவடி விளக்கொளிபோல கலக்கமானேன்
பிளவரெனும் பாங்கில்லாமத்ததானேன்
பிற்கோடை மழையில்லாத பயிரதானேன்
தேவர்களும் முனிவர்களும் தேவனான்கும்
சிறப்புடனேயினிதிருந்த அரனார்மைந்தா
தூவியதோர் மயிலேறும் செந்தூர்க்கந்தா - சுவாமி
தோகைமயிலேறி வந்து தோற்றுவாயே. 12

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கதிர்காமப்பத்து

திருச்சிற்றம்பலம்

ஆதாரமாகி அறிவாகிமூல அதுவாய் அகன்ற வடிவாய்
வேதாகமங்கள் மிகவே விளங்க வெளியான வெள்ளை விடைமேல்
நாதாமுனித்த நடுவானதூதர் கொடுபோக நண்ணிவருமுன்
ஆதாரமான கதிர்காமவேலர் வரவேணுமெங்கள் அருகே. 1

வேதாகமங்கள் நிலைகண்டசோதி விதியாலழிந்த விரகால்
தாதா பரிந்து சிலநாள் மெலிந்து எனையாள்வதென்று அறியேன்
ஆதாரசோதி கௌமாரி சூலி அழகால் அதிகரித்த குமரா
ஆதாரமான கதிர்காமவேலர் வரவேணு மெங்களருகே. 2

துலையாத கண்டசடம் பாவி யானும் துயரால் அலைந்து மிகவே
கலையானதிங்களுளமாகி நின்று கதிரால் வருந்த வசமோ
அலையாழி நஞ்சை அமுதாக உண்ட அரனாருகந்தமுருகா
மலைமேலுகந்த கதிர்காம வேலர் வரவேணுமென்றனருகே 3

தேறாத நெஞ்சு தெளியாத சிந்தை சிலநாள் மெலிந்து பலகால்
ஆறாது கொன்றை திருமேனி கண்டு அடியேன் உயிருக்கு அறியேன்
காறாது நீதி அடியாரிடங்கள் குடிகொண்ட மாயன் மருகா
மாறாத தோகை மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே. 4

இதமான பூசை எளியேன் மிகுந்து இசைபாடுதற்கு அறியேன்
நிலையாய் வணங்கி நிதமே நினைந்து தமிழ்மாலை கொண்டு படியப்
பதமே செறிந்து கரமேகுவித்து உனையே நினைக்க அறியேன்
மதவேழின் தம்பி கதிர்காம வேலர் வரவேணுமென்றனருகே 5

பாலூறல் கொண்டு கனிவாயமர்ந்து பயனஞ்செழுத்தை அறியேன்
மாலான வள்ளிதனை நாடி வந்து மரமாகி நின்ற குமரா
வேலாடல் கொண்டு வெஞ்சூர்தடிந்து விறலாலழித்தகுருவே
மாலான தேவர் மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தாயாரும் தந்தை உயிராகியின்ப நலமாய் விளங்க அறியேன்
பலகாலிறந்து பலகால் பிறந்து பயனின்னமுதம் தருவாய்
உலகேழுமாளு நவகோணரான உருவமாய் விளங்குமயில்மேல்
வலமாக வந்த கதிர்காம வேலர் வரவேணுமென்றனருகே. 7

வண்குண்டசோலை மயிலுறை பாயு வயலுற்றிலங்க வடிவேல்
கண்டொன்று சொல்லித்திரிவார்கள் வாயால் கண்டே நகைக்க விதியோ
நன்றென்று சொல்லி நயனஞ்செழுத்தை நயமாய் உரைக்க வருவாய்
வண்டுநற்சோலை மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே. 8

வற்றாத பொய்கை வளர் சோலைநாடு மலைமேலுகந்த முருகா
உற்றாரெனக்கு ஒரு பேருமில்லை உமையாள்தனக்கு மகனே
முற்றாரடைந்து அடியேனை யாளமுருகேசர் எந்தன் மனத்தே
விற்றாரமாகமயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே 9

தலைகெட்ட நூலினின் நிழல் போல நின்று தடுமாறிநொந்து தமியேன்
நிலைகெட்டு நானும் புவிமீதில் நின்று நெடுமூச்செறிய விதியோ
அலைதொட்ட செங்கை வடிவேலர்தானும் அடியேனை யாளுமுருகா
மலைவிட்டு பச்சை மயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே 10

திருவாசல் தோறும் அருள் வேதமோதும் சிவனஞ்செழுத்தை மறவேன்
முருகேசனாக அடியார் தமக்கு முதலாகி நின்ற குமரா
குருநாதரென்று வடிவேலெடுத்த குமரேசா எந்தன் மனத்தே
மறுமாதரோடு மயில் மீதிலேறி வரவேணு மென்றனருகே 11

காலனெழுந்து வெம்பூசல் செய்து கயிறுமெடுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியாரிடத்தில் துணையாக வந்து அருகே
வாளும் சுழற்றி அடியாரை நித்தம் குடியேற வைத்த முருகா
கோடுண்ட குஞ்சமயில் மீதிலேறி வரவேணுமென்றனருகே 12

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கதிரேசப்பத்து

திருச்சிற்றம்பலம்

நீடாழி சூழ்உலகில் கண்கண்ட தெய்வம் நீ
நிலையார்ந்த குருபரனும்நீ
நிதியும்நீ பதியும்நீ, மறையும்நீ, பொருளும்நீ
நித்திய முருகேசனும்நீ,
வாடாத தவமும்நீ மதியும்நீ வதியும்நீ
வாய்த்த தாய் தந்தையும் நீ,
வல்லசுர செல்வம்நீ மகிமைப் பிரதாபன்நீ
மாறாத தெய்வம் நீயே
கோடாத குமரன் நீ கொஞ்சுதமிழ்க் கடவுள் நீ
கூற்றை உதைத்தோன் மகனும்நீ
கூறுமடியார்க் கருளும் குஞ்சரி மணாளன்நீ
கொந்தலர் கடம்பனும்நீ
காடாளும் குறவள்ளி பாகனே எளியேனைக்
காப்பதுன் பாரமன்றோ
கந்தனே, சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 1

மண்ணாட மலையாட மயிலாட அயிலாட
மங்கைகுற வள்ளியாட
மாலாட மறையாட மதியாட விதியாட
வானவர் கோனுமாட
விண்ணாட மேருமலை கங்கைவேணியனாட
வித்தககணேசனாட
மிஞ்சுகிண் கிணியாட செஞ்சேவற் கொடியாட
விற்பன்னர்கள் கூட்டமாட
பண்ணாட, வருமுனிவர் சித்தரொடு எண்திக்குப்
பாலகரும் மேவியாடப்
பனிமலர் கடம்பாடப் பக்தரெல்லாம் ஆடப்
பரதமிடு மாதராட
கண்ணாட இதுவேளை காட்சி தந்தாளவே
கனிந்தென்முன் ஓடிவருவாய்
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளுங்
கதிர்காமக் கதிரேசனே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரமில்லாத சஞ்சாரத்திலே தினமும்
சஞ்சல வாழ்க்கை கொண்டு
தப்பாமல் இப்புவியில் சாண்வயிற்றுக்காகத்
தந்திரமெலாம், படித்துச்
சீரழிவு, பொய், சூது, நிந்தைசேர் மார்க்கமே
தேர்ந்து மிகவேயுழன்று
செப்பரிய நன்மார்க்க ஜோதியே காணாமல்
சிந்தையிருட் கோட்டமாகித்
தாரணியிலே முழு மூடனாய்த்திரிகின்ற
தன்மை யெல்லாந் தெரிந்தும்
தமியேனை இன்னமும் ஆட்கொள்ள ஒண்ணாது
சாதிப்பதழகாகுமோ?
காரவுணர் படைவென்றவீரப்பிரதாபனே
கண்ணிய குஞ்சரி மோகனே
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 3

பூணும் பணிக்கல்ல புனித வாடைக்கல்ல
பொன்றாத வாழ்வுக்கல்ல
புவியில் பலமாடிகள் கொண்டுலவுதற்கல்ல
போந்தமனை செல்வமக்கள்
பேணும்படிக்கல்ல, பெரியோனெனப் படியில்
பேசுவதற்காகவல்ல
பெருமையால் எண்திசையும் புகழ் கொள்வதற்கல்ல
பேருலகிலே பிறந்து
சாணும் வளர்க்கல்ல தக்க பொருளீட்டியே
தாஷ்டீக மடையவல்ல
சந்ததம் மயில்மீது வள்ளி தெய்வானையொடு
சார்ந்து வருதரிசனத்தான்
காணும்படிக்கு நான் வேண்டினேன் வந்தருளும்
கனகாபி ஷேக முருகா
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை நொந்தேனென்று பன்முறை கூறியும்
செவியென்ன கேளாததோ
தெள்ளறிவு சற்றேனும் இல்லாத சேயெனினும்
தேடாத தந்தையுண்டோ
எந்த நேரந்தனிலும் இணையடியைத் தொழுதபின்
இரங்காத நெஞ்சமுண்டோ
ஈரேழு லோகமும் வந்திக்கும் கடவுள்நீ
என்குறை யறிந்திடாயோ
விந்தையும் மாயமும் நீயே புரிந்திடில்
மீட்கவோர் தெய்வமுண்டோ
மேதினியெலாம் படைத்தோங்கும் அருள் மகா
வீரப்பிரதாபனன்றோ?
கந்தமிகு குழல்வள்ளி தெய்வானையார் தங்கள்
காதற்கிசைந்த கணவா
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 5

நெறிகொண்டு நின்னடி போற்றாத போதிலும்
நெஞ்சில் ஒண்ணாதபோதும்,
நிலை கொண்டநின்கோயில் வாராதபோதிலும்
நேரில் வாராதபோதும்,
வெறிகொண்ட மூர்க்கனென்றிங்குற்ற போதிலும்
வீணென்றழிந்த போதும்,
வேசியரை நாடினும், மோசமே செய்யினும்,
மேதையரை நிந்தை செயினும்
குறிகண்டு காப்பதும் தாய்தந்தைக்கல்லவோ
குற்றமது எனக்கல்லவே!
குவலயத்தோர் உன்னை ஏசிடாரோ எந்தன்
குறைதீர்த்தல் பெரிதோ பிள்ளைக்
கறியுண்ட பரமற்குப் பிரணவமுரை செய்த
கண்ணாயிரன்றன் மருகா,
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாத லோபி என்றே பெயரெடுத்தனோ?
எளியவரை இம்சித்தனோ?
எள்ளளவு மெண்ணாது குருநிந்தை செய்தனோ?
ஈந்த பொருள் இலையென்றனோ?
மாயா வருத்தமுறப் பெற்றதோர் மாதாவை
மனம் வருந்தச் செய்தனோ?
வஞ்சனை புரிந்தனோ மாதர்பழி கொண்டனோ?
வழியதனில் முள் இட்டனோ?
வாயாரப் பொய் சொல்லி மண்ணுலகில் வாழ்ந்தனோ?
மாதவரை ஏசினேனோ?
ஈனமொன்றெண்ணியே, வாக்கொன்று சொல்லியே
வன்செயல் ஒன்றே கண்டனோ?
காயாத பூம்பொழில் மேவுமுருகா எல்லாம்
கடிதே பொறுத்தருளுவாய்,
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே. 7

அன்னையும் இருந்தென்ன? தந்தையும் இருந்தென்ன?
ஆரார் இருந்துமென்ன?
அரும்பொருள் இருந்தென்ன? பெருமையுற வாழ்ந்தென்ன?
அம்புவியை ஆண்டுமென்ன?
தன்நிகரில் அட்டமா சித்து விளையாண்டென்ன?
தலங்கள் பல சுற்றியென்ன?
தாஷ்டீகங் கொண்டென்ன, தர்மம்மிகச் செய்தென்ன?
தண்புனலில் மூழ்கியென்ன?
மன்னும் இப்பேருலகில் தீர்க்கமுடன் இதுவெலாம்
மறலியைத் தடுக்க வருமோ?
மாசுற்ற சந்தையின் கூட்டமிது என்றுதான்
மலரடியை வந்தணுகிறேன்
கன்னல் மொழி வள்ளி தெய்வானையர்தம் மோகனே
கண் பார்த்தருள் புரிகுவாய்
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை சொல்லியும் கேளாதிருக்கஉன்
இதயந்தான் என்ன கல்லோ?
ஈராறு காதிருந்து ஏறாத மந்தமோ?
ஏழைமேல் நிர்ப்பந்தமோ?
நித்தியம் குறவள்ளி மோகமோ? முந்நாளில்
நேர்ந்திட்ட சாபந்தானோ?
நீதியோ நானென்ன வாதியோ? நெஞ்சிலிதை
நினைந்திடவும் நேர்மைதானோ?
இத்தரையில் கண்கண்ட தெய்வம்நீ ஆனதால்
இனியுன்னை நான் விடுவனோ?
என்றென்றும் உன்னடிமை இன்னலே கொண்டுழல்தல்
ஈதுனக் கழகுதானோ?
கத்து கடல் சூழ் புவியில் நத்தியருள் செய்குவாய்
கருணைப்பிரகாச முருகா
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 9

செகமெலாஞ் சுற்றியே வந்தாலும் நின்போலத்
தரிசிக்கத் தெய்வமுண்டோ?
சார்ந்திட்ட முன் வினைகள் தீர்ந்து சுகபேரின்பம்
தந்தருளுந் தெய்வதுமுண்டோ?
எளியோர்தம் குறைதனை அன்போடு உளந்தனில்
ஏற்கவோர் தெய்வம் உண்டோ?
பகரரிய செல்வமும் மங்காத கீர்த்தியும்
பாலிக்கும் தெய்வம் உண்டோ?
பக்தர்களுக் காதார மூர்த்தியென்றுன்னையே
பண்புடன் போற்றிநின்றேன்
கனகதேவாதிதேவர்கள் சேவிக்கும் பாலனே
கண்பார்ந்தருள் புரிகுவாய்
கந்தனே சிவகாமி மைந்தனே எனையாளும்
கதிர்காமக் கதிரேசனே! 10

- திருச்சிற்றம்பலம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணியர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மாமேவு நவரத்ன கேயூர மணிமகுட
மன்னிப் பொலிந்த முடியும்
வச்சிர நுதற்றிலகு வெண்ணிறு மோராறு
வதன விம்பத்தி னழகும்
பாமேவும் பத்தர்க்கு மடைதிறந் தன்பொழுகு
பன்னிரு விழிக் கருணையும்
பகரரிய பழமறை பழுத்தொழுகு சிறுநகைப்
பவளஞ் சிறந்த வாயும்
காமேவு கரகமர பந்தியுஞ் சேவலுங்
கனக மயிலுங் கிண்கிணிக்
காலுமுந் நூலும் வடி வேலுமென் மேலுமெக்
காலுந் துலங்க வருவாய்
தாமோத ரானந்த கோவிந்த வைகுந்த
சரச கோபாலன் மருகா
துர்மறைக ளேதந்த பரம குருவாய் வந்த
சரவண பவானந்தனே 1

கண்கொண்ட பூச்சக்ர வாளகோளத்தையொரு
கதிகொண் டெழுந்து சுற்றிக்
ககன கூடந்தடவி யுகசண்ட மாருதக்
காலொடு சுழன்று பின்னி
விண்கொண்ட மேகபட லத்தைச் சினந்து தன்
மெய்யன்ப னென வுகந்து
விடவரவின் மருடமுடி சடசடென வுதறிகெடு
மேருவொடு பாய்ந்து கொத்தித்
திண்கொண்ட வல்லசுரர் நெஞ்சுபறை கொட்டத்
திடுக்கிட விடுத்து மோதித்த
திறை கொண்டடித்தமர் திறைகொண் டணைத்துலகுந்
திறைகொண்ட மயில் வாகனா
தண்கொண்ட நீபமலர் மாலையணி மார்பனே
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவா னந்தனே 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னிகயி லாயகிரி மேருகிரி கந்தமலை
தோகைமலை கயிலைமலைவான்
சோலைமலை மேவிய விராலிமலை மன்னிய
சுவாமிமலை யுஞ்சிதந்த
சென்னிமலை வேளூர் கடம்பமலை மேலிவயல்
திருவருணையின் கோபுரம்
திருவாவினன்குடி பரங்கிரி திருந்தணிகை
சிவாலயந் திரு வேரகம்
இன்னில மதிக்கும் திருச்செந்தின் முதலான
வெண்ணப்படாத கோடி
எத்தலமு நின்கருணை வைத்துவிளையாடல் வித
மெத்தனை யெனச் சொல்லுவேன்
தன்னைநிக ரொவ்வாத பன்னிருகை வேலனே
சரசகோ பாலன்மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவணபவா னந்தனே 3

நதியெங்கு மூழ்கித் தலந்தோறுஞ் சுற்றியு
நல்ல நியமங்கள் செய்தும்
நானென்ற வாணவர் தள்ளினோ மென்றுசிவ
ஞானங்கள் பல பேசியும்
கதிகொண்ட மவுனியா யட்டமா சித்தியொடு
கற்பந் தனைப் புசித்தும்
கண்ணீருக மூடிச் சிவானந்த மென்று
செயல் கண்டிருந்தோ மென்னவும்
எதிரொருவ ருக்கொருவர் தர்க்கித்து மற்கட்டி
யிப்படி யனந்தகோடி
இதுவல்ல வதுவல்ல வென்றுபோ ராடுவது
மென்னவகை யோவறிகிலேன்
சுதமென்று உன்னைநா னம்பினேன் நம்பினேன்.
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுரு வாய்வந்த
சரவண பவா னந்தனே 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரதப் பிரமாதி யமரார்கின் னரருரகர்
நாரணன் முதற் பண்ணவர்
நடுக்கம் பொருந்திய விடுக்கண் களைந்திட
நடக்குங் குழந்தை வயதில்
சூரபத்மாசுரன் கயமுகன்றாருகன்
துன்முகன் பானு கோபன்
துட்டகிர வுஞ்சுக்ர வுஞ்சாசுரன் சிங்கனொட
சுற்றிய வரக்கரையெல்லாம்
கோரசங் காரரண தூளிபட லங்கொண்டு
சூறாடி யுனது வெற்றிக்
கொடியேற விந்திரன் மணிமுடி யேறவானொடு
குடியேற வைத்த துரையே
தாரணியின் மேவுபரி பூரண வுல்லாசனே
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 5

சீலமிகு தற்பரனை யுன்னித்த தேகத்
தியானத் தெழுந்து பொங்கிச்
சில்லென்று மெய்மறந் தானந்த மவுனஞ்
ஜெனிக்கக் குவிந்து கண்ணீர்
ஆவிபொழி யக்கருணை யுள்ளங்கனிந்துருக
வன்புருக வென் புருகவே
அங்கங் குழைந்துபுள கிக்கநின் றுருகுவர
ரப்படியு மொன்றறிவனோ
காலங் கழித்துண்டு வீணுக்கலைந்து பல
காலப் பிரபஞ்ச மாயக்
கடற்குட் படிந்தே கிடக்கின்ற பாசங்
கடக்கும்படிக் கருளுவாய்
தாலமுழுது கண்டுநிலை கண்டகோ தண்டமால்
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லா லெறிந்துமுன் னெச்சிலைத் தந்துபின்
கண்ணைப் பறித்து வைத்தும்
கருதுவசை சொல்லியுஞ் செய்யசிறு மைந்தனைக்
கறிசமைத் துண்ண வைத்தும்
வில்லா லடித்துமோர் பாயலிற் றன்னுடைய
விரதஞ் செலுத்து வித்தும்
வெலையிலற் றூணொடு சுழன்றும் பிராணுக்கு
மெய்யன்ப னென நடந்தம்
நல்லா ரெனப்பேறு பெற்றார்க ளதுபண்டை
நான் செய்ய பூசையீச
னன்கிருபை யாமெனக் குன்கிருபை யல்லாது
நாடுவது வேறு முளதோ
சல்லாப வுல்லாச வில்லேறு வல்லாள
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 7

அற்புத மிகப்புகழ் விருப்பொடுசொ
லருணகிரி தனையு கந்தாய்
அம்புவிலி லின்பமுறு கும்பமனி முன்புவர
வன்புருகு பண்பு ரைத்தாம்
உற்பன வரக்கனெடு சர்ப்பன மனப்பய
முடற் றநக் கீரனொரு நாள்
உன் சலிகை தஞ்சமென நெஞ்சுருவ வஞ்சிகர
வஞ்சநேர் கிரிபி ளந்தாய்
எப்படியு முற்படு வினைப்பய னுலப்புமதை
யிப்புவியி லேமறுப்பா
யீதுகலி காலமென் றெண்ணவொண் ணாதுநா
னேழையடி யேனாகை யால்
தற்பர தயாபர மனோதர மகிழ்ந்து தவு
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத மாயச் சுகந்தந்த விக்கடுஞ்
சென்னஞ் செழித்த பின்பு
ஜெகதல மயக்கமதி லேயென் குடித்தனந்
தீயமருமோர் வங்கணம்
போராடு சமுசார பாசபந்த மிதிற்
போக மடவா ரிணக்கம்
பொரிவா யலைக்குமீ துள்ளபடி முன்வினைப்
போகந் தொடர்ந்த நெறியால்
ஆராலு முடிவுரா தானா லிதற்குநல்
லறிவென்ற தீபமொன்றுண்
அல்வழியி லேமனஞ் செல்லாம வலைகின்ற
வடியேனை யாட்கொள்ளு வாய்
தாரேறு பன்னிரு புயாசலக் கடவுளே
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 9

தருகாம மோகமுறு திமிதிமிங் கலமிக்க
தனலோப வனமு தலையாந்
தற்கோப வல்லவடவை மூடத்துவம் பரவி
சஞ்சல மெனுந் தரங்கம்
அரியவெனி லொருகுமிழி யஞ்ஞான வாரிதியி
வலைகின்ற சீவ ராசி
யத்தனையு மீனின் மேமனொரு வீசுவலை
யவ்வுயிலரில் யானு மொருவன்
கருதரிய பாரப்பெ ருங்கடல் கடந்தே
கடைத்தேற வேணு மென்றால்
கைத்தவளை யில்லையினி யென்செய்கவெ னுனது
காற்றவளை கைப்பற்றி னேன்
சரியசமர் செய்நெடிய சூரகெஜ சிங்கமே
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயநெறி யைந்தையு மடக்கிப் புலாதிகள்
சுழல்கின்ற வழி மறித்துச்
சுழிமுனை திறந்தமூ லாதார மேலாந்
துவாதசாந் தத்தை மூட்டி
வாயுவை யுருக்கிப் பெலத்துவரு குண்டலியை
வவ்விமேற் கொண்டெடுத்து
வாசியை நடத்தயவ் வோசையைத் தாவென்று
வழிகொண்டு நாத வெளியில்
தோயும் பரமபிரம பூரண விலாசமது
சோதிப்ப தென்ன வெளிதோ
தொலையாது நிலையாத தாகையா லுன்பதந்
துணையே துணைப் பற்றினேன்
தாயான மனோகர மயூரவா கனமுருக
சரசகோ பாலன் மருகா
சதுர்மறைக ளேதந்த பரமகுருவாய்வந்த
சரவண பவா னந்தனே. 11

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினி விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன் மாமயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக் கருணை வாருதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள் இருக்குமா மணியே போற்றி

சண்முகக் கடவுள் போற்றி சரவணத்துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகைப்பாலா போற்றி
தண்மணிக் கடம்பமாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதனவள்ளி வேலவா போற்றி போற்றி

சரணம் சரணம் சரவண வபஓம்
சரணம் சரணம் தமிழ் தரும் அரசே
சரணம் சரணம் சங்கர சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்
சுபம்
முத்தான முருகன் தோத்திரப்பாடல்
முற்றிற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## பாதயாத்திரைக்கு தேவையான முக்கிய பொருட்கள்

காவிவேட்டி, உத்திராட்ச மாலை
திருநீற்றுப்பை, சந்தணம், குங்குமம்
போர்வை (பாரமில்லாதது), ஒயில்குளத் (மழைதாங்கி)
தண்ணீர்க் குவளைகள், கற்பூரம், சந்தணக்குச்சி
மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, மின்சூள் (டோச் லைட்)
சாப்பாட்டு பாத்திரம், குவளை, தோள் பை
விரிப்புகள், புத்தகங்கள், இசைக்கருவிகள்
பொரிமா (சீனிமா)
பூசைப் பொருட்கள் (அவல், கடலை, பயறு)
உணவுப் பொருட்கள், (அரிசி, மா, காய்கறி)
சீனி, தேயிலை, கோப்பி
மருந்துப் பொருட்கள்,
தேங்காய், தேங்காயெண்ணெய்
மேலும் தங்களுக்குத் தேவையான பொருட்களும்.

முருகன் துணை

| இடம் | கி.மீ |
|---|---|
| உகந்தை மலை முருகன் ஆலயம் | 0 KM |
| வாகுற வெட்டை கிணற்றடி | 08 KM |
| குமுக்கன் ஆறு | 11 KM |
| நாவலடி மடு | 17 KM |
| வியாழக்கங்கை | 17 KM |
| வள்ளியம்மன் ஆற்றுப் பாலம் | 08 KM |
| கட்டகாமக் குளம் | 12 KM |
| பிள்ளையாரடி | 06 KM |
| கதிர்காமம் | 05 KM |

உங்கள் பாத யாத்திரை சிறப்பாக அமைய கதிர்காமக்கந்தன் அருள்புரிவாராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கு உய்வு உண்டாம் உய்(வு) இல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவ மாமுனியின் வாக்கினிற்கொப்ப மானிடராகிய நாம் ஒருவர் செய்த நன்றி மறப்பதாகாது. ஆகவே எனது நூல் வெளியீட்டுப் பணியின் பதினோராவது நூலான இத்தொகுப்புக்கு என்றும் ஆக்கமும் ஊக்கமும் ஒத்துழைப்பும் உதவியும் வழங்கி வரும் அன்பு உள்ளங்களை இவ்வேளையில் நினைவுகூருகின்றேன்.

எனது வெளியீடுகளில் அதீத அக்கறை காட்டிவரும் அன்பு ஆஸ்ரமம் நால்வர்கோட்டம். பாதை யாத்திரைக் குழுக்கள், இந்துப் பெரியோர், சைவச்சான்றோர், அன்பர்கள், அனைவரையும் மனக்கண் நிறுத்தியும், புத்தாக்கப் பணிக்கு ஒத்துழைப்பு நல்கும் திரு. முருகு. நல்லதம்பி (குருக்கள்), சண்முகம் முத்துலிங்கம், கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர். பி. கந்தசாமி (பொத்துவில்), இப்புத்தக விற்பனை முகவர் பிள்ளையினார் வேலாயுதபிள்ளை (முருகன் ஸ்ரோர்ஸ்), சில முத்துக்களை முன்வந்தளித்த நா. வசந்தராசபிள்ளை, சா. அழகையா (அண்ணாவியார்), ஆண்டிப்பிள்ளை தெய்வானை அம்மா மற்றும் நா.ஜெகதீசன் பூசாரி அவருடன் சி. சிவகுமார் மற்றும் எம் உறவுகளையும் மறவாது நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் எனது சகல வெளியீடுகளுக்கும் மறவாது ஆசி அருளுரை வழங்கும் அன்புமிகு எமது குருநாதர் வள்ளிமலை மேலாளர், சாது பாலாநந்தனின் இனியமுகம் என்நெஞ்சை விட்டகலாமலும், அன்னவரின் அடியவன் பரதன் கந்தசாமியும் இப்பிரதிகளை ஒழுங்குடன் அச்சுக்கோர்த்த விக்டரி அச்சகம், மற்றும் எனது மக்கள் மருமக்கள், கணனியில் பதிவுசெய்த கோபி அவர்கட்கும் எனது அனைத்து வெளியீடுகளுக்கும் பிழை திருத்திய க. வசந்தராசா ஐயா அவர்களுக்கும் வெளியீட்டு நிறுவகம், ஆதரவாளர்கள், முருகத்தொண்டர்கள் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக.

வணக்கம்




இவ்வண்ணம்,
தங்களின் நன்றி மறவாத,
நாகமணி விநாயகமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விக்டரி அச்சகம் கல்முனை 0770643990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org